* 128 வினு—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், புதுக்கோட்டைப் பகுதியிலுள்ள சுந்தரப்பட்டியை ஒட்டியிருக்கும் கூடலூர் ஆற்றின் குறுக்கே அமைந்திருக்கும் பழைய அணையைச் சீர்படுத்திக் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசுக்கு உண்டா?

(இ) ஆமெனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

புலவர் பொ. பொன்னம்பலம்: புதுக்கோட்டை பகுதியில் சுந்தரப்பட்டியை ஒட்டியிருக்கும் கூடலூர் ஆற்றின் குறுக்கே இருக்கும் பழைய அணை பயன் இல்லாமல் இருக்கிறது. இரு பக்கத்திலும் மூடு வாயில்கள் அமைத்து சீர்படுத்திக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: வெள்ளாற்றின் குறுக்கே சுந்தரம்பட்டி அணைக்கட்டு கட்ட ரூ. 2.05 லட்சத்திற்கு ஒரு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு இருக்கிறது. இதைக் கட்டுவதனுல் இரண்டு குளங்கள், கும்மக்குடிபட்டியும், சேந்த மங்கலம் குளமும் பயன்படும். இந்த இரண்டு குளங்களையும் எடுத்துக்கொள்ள சுப்ரீம்கோர்ட்டில் ஒரு தள்ளிவைப்பு ஆணை இருக்கிறது. அந்த ஆணை காரணமாக மேற்கொண்டு வேலை செய்ய முடியவில்லை. அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அந்த 'ஸ்டே' ஆர்டரை ரத்து செய்யவேண்டும். பிறகுதான் நடவடிக்கை எடுக்கப்படும்.

* 129 வினு—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதியில் நல்லாற்றின் குறுக்கே (1) மண்ணரை கிராமத்தில் கஞ்சம்பாளையத்திற்கு அருகிலும், (2) தொட்டியபாளையம் கிராமத்திலும் அணைகள் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) இத்திட்டம் தலைமைப் பாசனப் பொறியாளரால் பரிசீலிக்கப்பட்டு பின் கைவிடப்பட்டது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சூப்பிரண்டெண்டிங் இன்ஜினியர் பரிசீலனை செய்து அங்கே அணை கட்ட ஏற்ற இடம் என்று தேர்ந்து எடுத்து இருக்கிறுர்கள். குடி தண்ணீருக்கு மிகுந்த கஷ்டம் இருப்பதால் உடனடியாக அணை கட்ட அரசாங்கம் இனியாவது பரிசீலனை செய்து ஆவன செய்யுமா?